பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
18 10 2024 **FRIDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஜார்க்கண்ட் சட்டப்பேரவை முதல்கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.
2. மலாவி சென்றுள்ள குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, அந்நாட்டு அதிபர் திரு. **Lazarus Chakwera**-வுடன் இன்று இருதரப்பு பேச்சு நடத்துகிறார்.
3. நாட்டில் கடந்த பத்தாண்டுகளில், ஆயுர்வேத மருத்துவ முறை சிறந்த வளர்ச்சியை கண்டு வருவதாக ஆயுஷ்துறை இணையமைச்சர் திரு. பிரதாப்ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.
4. நாடாளுமன்றத்தில் செயற்கை நுண்ணறிவு மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை மக்களவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா வலியுறுத்தியுள்ளார்.
5. மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரோஹகன் கபூர் - ருத்விகா ஷிவானி கடே இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

ஜார்க்கண்ட் சட்டப்பேரவை முதல்கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.

மொத்தம் 43 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

வேட்புமனு தாக்கல் செய்ய இம்மாதம் 25ஆம் தேதி கடைசி நாளாகும்.

வேட்புமனு மீதான பரிசீலனை 28ஆம் தேதி நடைபெறவுள்ளது.

வேட்புமனுக்களை திரும்பப் பெற இம்மாதம் 30ஆம் தேதி கடைசி நாளாகும்.

அடுத்த மாதம் 13ஆம் தேதி முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 23ஆம் தேதி நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

மலாவி சென்றுள்ள குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு அந்நாட்டு அதிபர் திரு. **Lazarus Chakwera-**வுடன் இன்று இருதரப்பு பேச்சு நடத்துகிறார்.

பல்வேறு விவகாரங்களில் பிரதிநிதிகள் நிலையிலான கூட்டமும் நடைபெறவுள்ளது.

முன்னதாக நேற்று இந்தியா – மலாவி வர்த்தக கூட்டத்தில் உரையாற்றிய திருமதி. திரௌபதி முர்மு, இருநாடுகளுக்கு இடையே வேளாண்மை, சுரங்கம், எரிசக்தி, சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்க ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித்தார்.

இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் அதிகரித்து வருவது குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

மலாவியின் நான்காவது பெரிய வர்த்தக கூட்டாளியாக இந்தியா திகழ்கிறது என்று அவர் கூறினார்.

மலாவியின் பல்வேறு துறைகளில், இந்தியாவின் சார்பில் 500 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, அங்கு வசிக்கும் இந்தியர்களை சந்தித்து உரையாடினார்.

சிறப்பு வாய்ந்த பணிகளில் தொடர்ந்து ஈடுபடுமாறு அவர்களை குடியரசுத்தலைவர் கேட்டுக் கொண்டார்.

**>>>>><<<<<**

கர்நாடக மாநிலம், மாண்டியாவில் வேலைவாய்ப்பு முகாமை மத்திய கனரக தொழில்துறை அமைச்சர் திரு. எச்.டி. குமாரசாமி இன்று தொடங்கி வைக்கிறார்.

சர் விஸ்வேஷ்வரய்யா மைதானத்தில் நடைபெறவுள்ள இரண்டு நாள் முகாமில், 150 நிறுவனங்கள் பங்கேற்கவுள்ளன.

இந்திய எஃகு ஆணையம், தேசிய கனிமவளக் கழகம் உள்ளிட்ட நிறுவனங்கள் இந்த முகாமில் இடம்பெறுகின்றன.

மாண்டியா பகுதியைச் சேர்ந்த மூவாயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை அளிக்கும் வகையில் இந்த முகாமிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், 2014ஆம் ஆண்டு முதல் ஆயுர்வேத மருத்துவ முறை சிறந்த வளர்ச்சியை கண்டு வருவதாக ஆயுஷ்துறை இணையமைச்சர் திரு. பிரதாப்ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று தொடங்கிய ஆயுர்வேத ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் அதன் உலகளாவிய வாய்ப்புகள் குறித்த சர்வதேச மாநாட்டில் அவர் உரையாற்றினார்.

சர்வதேச அளவில் ஆயுர்வேத சிகிச்சை முறையை பிரபலப்படுத்த பல்வேறு திட்டங்களை அரசு தொடங்கியுள்ளதாக திரு. பிரதாப் ராவ் ஜாதவ் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட், மருத்துவத் துறையில் ஆயுர்வேதத்தின் முக்கியத்துவம் குறித்து அவர் எடுத்துரைத்தார்.

மருத்துவ முறைகளில் ஆயுர்வேத சிகிச்சை எதிர்காலத்தில் முக்கிய இடம்பெறும் என்றும் அவர் கூறினார்.

மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இம்மாநாட்டில், உடல்நலனுக்கு ஆயுர்வேத மருத்துவத்தின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

>>>>><<<<<

மத்தியப்பிரதேசம், பஞ்சாப், உத்தரபிரதேச மாநிலங்களில் நெடுஞ்சாலைகளை புதுப்பிப்பதற்கான நிதி ஒதுக்கீட்டிற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின்கட்கரி, மத்தியப் பிரதேசத்தில் போபால் - கான்பூர் பொருளாதார வழித்தடத்திற்காக மூவாயிரத்து 500 கோடி ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு பாட்டியாலா புறவழிச்சாலை அமைப்பதற்கு ஆயிரத்து 250 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

உத்தரபிரதேசத்தில் பரேலி – புதான் தேசிய நெடுஞ்சாலையின் மேம்பாட்டிற்காக ஆயிரத்து 575 கோடி ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

ராபி பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது தங்களுக்கு மிகுந்த பயனளிக்கும் என்று தமிழகத்தில் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியுள்ளார்.

இது விவசாயிகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் என்றும் அவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - விவசாயி 37 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

நாடாளுமன்றத்தில் விவாதங்களை மேற்கொள்ளவும், ஆவணங்களை காப்பதற்கும் செயற்கை நுண்ணறிவு மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை மக்களவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா வலியுறுத்தியுள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்ற நாடாளுமன்ற தலைவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் அவர் பங்கேற்று உரையாற்றினார்.

இந்தியாவின், தொழில்நுட்பம் சார்ந்த, காகிதமில்லா நாடாளுமன்ற நடவடிக்கைகளை மற்ற நாடுகள் பாராட்டுவதாக அப்போது திரு. ஓம் பிர்லா் கூறினார்.

>>>>><<<<<

மகாராஷ்ட்ராவில் சட்டப்பேரவை தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அரசியல் கட்சிகள் தேர்தல் பணிகளை தொடங்கியுள்ளன.

மும்பையில் நேற்று மஹாவிகாஸ் அகாதி கூட்டணிக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது.

சிவசேனாவின் உத்தவ் தாக்கரே பிரிவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சஞ்சய் ராவத், மகாராஷ்ட்ரா மாநில காங்கிரஸ் தலைவர் திரு. நானா பட்டோல் உள்ளிட்டோல் இதில் கலந்து கொண்டனர்.

மொத்தம் 288 தொகுதிகளைக் கொண்ட மஹாராஷ்ட்ரா சட்டப்பேரவைக்கு அடுத்த மாதம் 20ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதற்கிடையே, **Nanded** மக்களவை இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக திரு. ரவீந்திர சவானை அக்கட்சி அறிவித்துள்ளது.

**>>>>><<<<<**

மத்தியப்பிரதேச மாநிலம், **Datia** அரசு மாவட்ட மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரியில் மகளிர் பாதுகாப்பிற்காக எச்சரிக்கை கருவ பொருத்தப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் பணிபுரியும் பெண் ஊழியர்களின் பாதுகாப்பிற்காக இந்த கருவி பொருத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பெண் ஊழியர்களுக்கு ஆபத்து ஏதும் ஏற்பட்டால் அவர்கள் இந்த எச்சரிக்கை கருவியை அழுத்தியவுடன், ஐந்து நிமிடங்களுக்குள் பாதுகாப்பு பணியாளரகள் விரைந்து சென்று அவர்களை மீட்க முடியும் என்று அவர் கூறுகிறார்.

மருத்துவமனையின் மூன்று தளங்களிலும் பணியாளர்களின் அறையில் இந்த எச்சரிக்கை கருவி பொருத்தப்பட்டுள்ளது.

மத்தியப்பிரதேச மாநிலத்தில் மகளிரின் பாதுகாப்பிற்காக முதல்முறையாக **Datia** அரசு மருத்துவமனையில் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

அஸ்ஸாம் மாநிலம், **Dibalong** ரயில் நிலையத்தில் அகர்தலா – லோக்மான்யா திலக் எக்ஸ்பிரஸ் ரயிலின் 8 பெட்டிகள் நேற்று தடம்புரண்டன.

இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

விபத்து குறித்த தகவல் கிடைத்ததும், மீட்புப் பணிக்காக நிவாரண மற்றும் மருத்துவப் பொருட்களை ஏற்றிக் கொண்டு, **Lumding-**கிலிருந்து சிறப்பு ரயில் ஒன்று சம்பவ இடத்திற்கு சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த விபத்தை அடுத்து **Lumding – Badarpur** வழித்தடத்தில் ரயில் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

**>>>>><<<<<**

மொரீசியஸ் நாட்டில் புதிய தண்ணீர் குழாய் அமைப்பதற்கான திட்டத்திற்காக இந்தியா 487 கோடி ரூபாய் கடன் வழங்கியுள்ளது.

இதன்மூலம், அந்நாட்டில் சுமார் 100 கிலோமீட்டர் தொலைவிற்கு புதிய தண்ணீர் குழாய்கள் அமைக்கப்படவுள்ளது.

பாரத ஸ்டேட் வங்கியின் மூலம் இந்த நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இதற்கான கடிதத்தை வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், மொரீசியஸ் வெளியுறவு அமைச்சர் திரு. **Maneesh Gobin-**னிடம் வழங்கினார்.

**>>>>><<<<<**

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரோஹகன் கபூர் - ருத்விகா ஷிவானி கடே இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை 21-14, 21-13 என்ற செட்கணக்கில் மலேசியாவின் **Wei Liang Tan – Ling Yap** இணையை வென்றது.

**>>>>><<<<<**

லண்டன் **WR** செஸ் மாஸ்டர்ஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜூன் எரிகேஸி கோப்பையை வென்றார்.

இறுதியாட்டத்தில் அவர் பிரான்ஸின் **Maxime Vachier Lagrave-**ஐ 2-1 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றிபெற்றார்.

செர்பியாவில் நாளை மறுநாள் தொடங்கவுள்ள ஐரோப்பிய செஸ் கிளப் போட்டியில் அர்ஜுன் எரிகேஸி பங்கேற்கவுள்ளார்.

**>>>>><<<<<**

**Almaty** ஒப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, அர்ஜென்டினாவின் **Guido Andreozzi** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்த இணை 6-3, 6-4 என்ற செட்கணக்கில் கஜகஸ்தானின் **Shevchenko – Timofey Skatov** இணையை வென்றது.

**>>>>><<<<<**

தமிழ்நாடு – தில்லி அணிகளுக்கு இடையேயான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

தில்லியில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

**>>>>><<<<<**

உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் தென்னாப்பிரிக்கா 8 விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை வென்று இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

**>>>>>END<<<<<**